# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 33 May- 2020 Issue - 5


ஆசிரியர் உரை

## தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை

இப்பூமியில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் யாரும் முன்னெப்போதும் கடந்து போகாத வழியில் உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்த அவலச்சூழல் ஏகமாய் எல்லோரையும் பாதித்திருக்கிறது. விதிவிலக்கிற்கு விதிவிலக்கு கொடுத்த ஒரு சம்பவமாகவே இது பார்க்கப்படுகிறது. இன்று உலகெங்கும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் ஒற்றை வார்த்தை **கொரோனா** அல்லது **கோவிட்**–19 என்பது. மனிதர்களை அலற வைக்கும் இந்த வார்த்தையோடு ஒட்டிக் கொண்டு வந்து சம்பந்தப்பட்டவர் களை அச்சுறுத்தும் இன்னொரு வார்த்தை Quarantine அல்லது **தனிமைப்படுத்துதல்**. இக்கொடிய தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள உலக சுகாதார அமைப்பாலும், பன்னாட்டு அரசாங்கங்களாலும் கண்டு பிடிக்கப்பட்ட அருமருந்து இது ஒன்றுதான். இதைத்தாண்டி இவர்களால் ஓர் அங்குகலம் கூட நகர முடியவில்லை. சர்வ வல்லவருக்கு முன்பு தான் ஒன்றுமில்லை என்பதை மனிதன் இப்பொழுதாவது புரிந்து கொண்டால் நல்லது. ஆனால், இந்த மருந்தும் மனிதனின் அறிவுக்கு எட்டுவது போல் தெரியவில்லை.

தனிமைப்படுத்திக் கொள்வதை உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ சமுதாயம் பெரிதாகத் தயக்கமில்லாமல் ஏற்றுக் கொண்டு, கிறிஸ்துவின் உபதேசப்படியான ஆராதனை அல்லது தொழுகையைப் புறக்கணித்து, ஆன்மீகக் காரியங்களிலிருந்து தங்களை அந்நியப்படுத்திக் கொண்டபோது, எத்திக்கிலும் வாழும் கிறிஸ்துவின் சபையார் இவ்வார்த்தையைத் தங்களோடு ஐக்கியப்படுத்தி, தங்கள் பக்திக் காரியங்களோடு

எவ்வித சமரசமும் செய்யாமல் சின்னஞ்சிறு மந்தையாக ஆங்காங்கே கூடி ஆராதித்து வருவது புதிய ஏற்பாட்டில் தங்களுக்கிருக்கும் பற்றைப் பறைசாற்றுவதாக உள்ளது. இதன் மூலம் தேவச்சட்டம் மீறப்படாமல், தேசச் சட்டமும் மதிக்கப்படுகிறது. ஆம், கிறிஸ்துவின் சபையார் மிகக் குறைவான எண்ணிக்கையில் குடும்பமாக, சிறு குழுவாகக் கூடி, சமூக விலகலை அட்சரம் பிசகாமல் கைக்கொண்டு ஆராதனைக் காரியங்களில் சோர்ந்து போகாமல் பங்கு பெற்று வருகிறார்கள். தேவநாமத்திற்கு மகிமை உண்டாகட்டும்.

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின் வாழும் நம்மை ஆன்மீக ரீதியில் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாட்டில் நான்கு வகையான ஆராதனைகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. **ஆவியோடும், உண்மையோடும் கூடிய ஆராதனை** [யோவான்:4:24] **புத்தியுள்ள ஆராதனை [ரோமர் 12:1] வீணான** ஆராதனை [மத். 15:9]. **சுய இஷ்டமான ஆராதனை** [கொலோ 2:23] இப்பொழுது இந்த வரிசையில் **தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனையும்** சேர்ந்து கொள்கிறது. இதில் இருக்கும் ஒரே கவலை, சாத்தான் விசுவாசிகளை வஞ்சித்து இதைப் பழக்கமாகவும், வழக்கமாகவும் மாற்றிவிடக் கூடாது என்பதே.

சரி, தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனையின் மூலம் இவ்வளவு பிடிவாதமாக பக்திக் காரியங்களை கர்த்தருடைய பிள்ளைகள் நிறைவேற்றித்தான் ஆக வேண்டுமா என்ற கேள்வி எழுப்பப்படுமானால், அதற்கான பதில் **ஆம்** என்பதே. ஏனெனில், **நான் சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** [யோவான் 12:48] என்று இயேசு சொல்லியுள்ளார். மறுமையைக் கிறிஸ்துவோடு கழிக்க விரும்பும் ஒருவனுக்கு அவருடைய வார்த்தைகள் மிகவும் முக்கியம். அடுத்து, இப்படி வெகு சிலராகக் கூடி ஆராதனைக் காரியங்களில் பங்குபெறுவது மன நிறைவைத் தருகிறதா என்று கேட்கப்படுமானால் அதற்கான பதில் **இல்லை, இல்லவே இல்லை** என்பதுதான். ஆயினும், இப்படிப்பட்ட ஆராதனையின் மூலம் உலக மக்களின் பாவங்களுக்காக மரித்த இயேசுவின் வார்த்தைகள் உறுதியாகப் பின்பற்றப்படுகிறது. இதனால் கிடைக்கும் ஆத்தும திருப்தி அலாதியானது. இன்னும், ஆதிக் கிறிஸ்தவர்கள் கொடுத்த மாதிரி இதன்மூலம் ஏற்றுச் செயல்படுத்தப் படுகிறது [அப் 2:42]. வேறென்ன வேண்டும்?

இப்பொழுது, சத்தியத்தின்படி தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை மேலும் உறுதி செய்து கொள்வதற்கேதுவான வேதாகமக் காரணிகளைக் கவனிப்போம்.

## I சகோதரர் மீதான அன்பு மற்றும் அக்கறை காரணம்

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக்கொள்வதற்கான முதல் காரணம், சகோதர அன்பும், அவர்கள் மீதான அக்கறையும் இதன் மூலம் வெளிப்படுகிறது என்பது.

கொரோனா நோய்த் தொற்று பரவி விடும் என்று பயந்து வீடுகளிலேயே முடங்கி, சக கிறிஸ்தவர்களோடு ஆராதனையின் மூலம் சாவகாசம் வைப்பதையே தவிர்க்கும் கிறிஸ்தவர்கள் சகோதர அன்பு பற்றி எப்படிப் பேசலாம் என்று ஒருவேளை கேட்கப்படலாம். கேள்வியிலே நியாயம் இல்லாமலில்லை. ஆனால், கிறிஸ்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனைக் காரியங்களில் தங்களை ஈடுபடுத்துவது பயத்தினால் அல்ல. மாறாக, பயபக்தியினால். உண்மையான தேவ மனிதர்கள் எல்லாக் கட்டத்திலும் தேவனுக்குத்தான் பயந்து நடப்பார்கள். தங்களது பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்துவதில் அவர்கள் ஒருபோதும் புறச்சூழலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பழைய ஏற்பாட்டில் சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ மற்றும் தானியேல் போன்றவர்கள் இதற்கு மிகச்சிறந்த உதாரணங்கள். புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலர்கள் பற்றிச் சொல்லவே வேண்டாம். அதிகாரம் மிக்க ஆலோசனைச் சங்கத்தாரால் இயேசுவின் நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணக் கூடாதென்று உறுதியாய்க் கட்டளையிடப்பட்டிருந்தும், அதைத் துளியும் பொருட் படுத்தாமல் இயேசுவைப் பற்றிய போதகத்தால் எருசலேமை நிரப்பினார்கள். இதினிமித்தம் அவர்கள் விசாரிக்கப்பட்ட போது, **மனுஷருக்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்படிகிறதே அவசிய மாயிருக்கிறது** என்று ஓங்கி ஒரு போடு போட்டார்கள் (அப் 5:27–29). இதுதான் வேதாகமம் சார்ந்த தேவபக்தி.

அதுமாத்திரமல்ல, பக்திகாரியங்களில் பயம் என்பது ஒருவனை நரகத்திலே கொண்டு போய்ச் சேர்க்கும் என்பது தேவமனிதர்கள் அறிந்த ஓர் உண்மை (வெளி 21:8). ஆக, தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனைக்கு பயம் காரணமல்ல. **கொரோனா ஒரு தொற்றுநோய்** என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. இருமல், தும்மல், தொடுதல் போன்ற காரணங்களால் எளிதில் பரவக் கூடியது. இந்நோய் யாரை வேண்டுமானாலும் தாக்கலாம். இந்நோயின் விநோதம், ஒருவனுக்கு **இந்நோய் இருக்கிறது** என்பதே ஒரு குறிப்பிட்ட

நாட்களுக்குத் தெரியாது என்பது. அப்படியிருக்கும் போது எனக்கு இந்நோய் இருந்து நான் பிறரோடு ஆராதனையில் கூடி வரும் போது, என் மூலம் அடுத்தவர் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. மலைப் பிரசங்கத்தில் இயேசு ஆண்டவர் இப்படியாகக் கூறியுள்ளார். **ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்பு கிறீர்களோ; அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங் களுமாம் என்று** (மத் 7:12) மற்றவர்கள் எனக்கு எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடாதென்று விரும்புகிற நான், என்னால் மற்றவர்களுக்கு எவ்வித பாதிப்பும் நேராமல் பார்த்துக் கொள்வது என் கடமை. ஒவ்வொரு கிறித்தவனுக்கும் கிறிஸ்துவின் சிந்தை இருக்கிற படியால்தான், தனிமைப்படுத்தப் பட்ட ஆராதனையில் தங்களை ஈடுபடுத்தி, பிறருக்கு பாதிப்பு நேரா வண்ணம் பார்த்துக் கொள்கிறார்கள்.

இன்னும் அப்போஸ்தலன் யோவான் எழுதும்போது, என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல **கிரியை யினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்.** (I யோவா 3:17) என்று கூறியுள்ளார். ஆக, அருமையானவர்களே! தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனையின் மூலமாக யாருக்கும் பாதிப்பை உண்டாக்காத கிறிஸ்தவ அன்பு கிரியையினாலே உண்மையான அளவில் வெளிப்படுத்தப்படுகிறது. புரிகிறதா?

## II **பழைய ஏற்பாட்டு முன் உதாரணம் காரணம்**

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதற்கான இரண்டாவது காரணம், இதற்கான முன் உதாரணம் நமக்குப் பழைய ஏற்பாட்டில் உள்ளது என்பது.

அப்போஸ்தலன் பவுலடியார் ரோமபுரி கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது (ரோமர் 15:4) என்று கூறியுள்ளார். முன்பு என்பது பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டவை களைக் குறிக்கிறது. அப்படியானால், பழைய ஏற்பாட்டில் தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனைக்கு ஆதாரமாக என்ன இருக்கிறது என்று கவனிப்போம். எகிப்திலிருந்து இஸ்ர வேலர்களை வெளியே கொண்டு வர தேவாதி தேவனுக்கு ஓர் இரவு மட்டுமே தேவைப்பட்டது. ஆனால், எகிப்தை இஸ்ரவேலிலிருந்து அகற்ற 40 ஆண்டுகள் வரை எடுத்துக் கொண்டது. எகிப்தை அவர்களிலிருந்து விரட்டும் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பதுதான் லேவியராகமப் புத்தகம். ஆம், பரிசுத்த தேவனை எப்படி ஆராதிப்பது, அவருக்கு எப்படி சேவை செய்வது, அவருடைய சொல்லுக்கு எப்படிக் கீழ்ப்படிந்து நடப்பது

என்பதின் விளக்கவுரையாகவும், இஸ்ரவேலை ஆன்மீக ரீதியாக வழிநடத்தும் ஏடாகவும் இது உள்ளது. குறிப்பாக, தேவனுக்கும் ஜனங்களுக்கும் பாலமாகச் செயல்படும் ஆசாரியர்களுக்கான சட்ட விதிகள் இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது

இந்நாள் வரைக்கும், முற்றும் குணப்படுத்துவதற்கு சவாலாக இருக்கும் நோய்களிலே ஒன்று தொழுநோய். இந்தத் தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவன் எப்படி நடத்தப்பட வேண்டுமென்று லேவி. 13–ம் அதிகாரத்தில் நாம் பார்க்க முடியும். ''அவன் சரீரத்தின் மேல் வெள்ளைப் படர்ந்திருந்தாலும், அவ்விடம் அவனுடைய மற்றத் தோலைப் பார்க்கிலும் அதிக பள்ளமாயிராமலும், அதின் மயிர் வெள்ளையாக மாறாமலும் இருந்தால், ஆசாரியன் அவனை ஏழு நாள் அடைத்து வைத்து, ஏழாம் நாளில் அவனைப் பார்க்கக்கடவன். தோலில் ரோகம் அதிகப்படாமல், அவன் பார்வைக்கு ரோகம் நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழாம் நாளில் பார்க்கக் கடவன். தோலில் ரோகம் அதிகப்படாமல், சுருங்கியிருந்தால், ஆசாரியன் அவனை சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன். அது அசறு, அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து சுத்தமா யிருப்பானாக (லேவி. 13:4–6).

குஷ்டரோகம் பற்றி விபரமாகப் பார்ப்பது இங்கு நமது நோக்கமல்ல. மாறாக, ஒரு நோய், தொற்றை ஏற்படுத்தக் கூடியதாக இருக்குமானால், என்ன வழிமுறை கடைப்பிடிக்க வேண்டுமென்ற ஒரு விதியை நாம் இந்த அதிகாரத்தில் பார்க்க முடிகிறது. நோய்த்தொற்று என்று வரும்போது தனிமைப்படுத்தப் படுவது அவசியம் என்று பார்க்கிறோம். **ஆக, தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை** என்பது பழைய ஏற்பாடு நமக்குக் காட்டும் வழிமுறையை ஒட்டிய ஒன்றாகவே உள்ளது. எனவே, நிலைமை சீராகும் வரை இந்த ஆராதனை முறையைப் பின்பற்றுவதில் எவ்விதத் தவறும் இல்லை.

### III. வேதாகம போதனை காரணம்

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதற்கான மூன்றாவது காரணம், வேதாகம போதனைக்கு இது இசைவான ஒன்று என்பது.

எபிரெயர் ஆசிரியர் சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல நாமும் **விட்டுவிடாமல்,** ஒருவொருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் (எபி 10:25) என்று கூறியுள்ளார்.

நன்றாக கவனியுங்கள், **சபை கூடி வருதலை விட்டுவிடக் கூடாது** என்றுள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை செய்வதின் மூலம் நாம் சபையாகக் கூடி வருவதை **விட்டு விடவில்லை.** மாறாக, நாம் ஒட்டு மொத்த சபையாகக் கூடி வரக்கூடாது என்று அரசாங்கத்தால் **தடை செய்யப்பட்டிருக்கி றோம்.** விட்டுவிடுதல் வேறு, தடைசெய்யப்படுவது வேறு. சபை கூடி வருதலை தாங்களாகவே முன்வந்து விட்டுவிடுகிறவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்திற்குத் தங்களைக் கீழ்ப்படுத்த விரும்பாதவர்கள். தடுக்கப்படுகிறவர்கள் அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் தங்கள் விசுவாச நிலைக்கு எதிராகச் செயல்படும்படி அதிகாரமுள்ளவர்களால் நிர்பந்திக்கப் படுகிறார்கள். ஆக, இரண்டும் ஒன்றல்ல. ஒருவேளை, விசுவாசிகள் பிடிவாதமாக எதிர்த்து நின்று கூடி வருவதன் மூலம் ஒரு சமூகப் பரவல் ஏற்பட்டுவிடுமானால், கிறிஸ்துவின் சபை யாருக்கு சமுதாயத்தின் மத்தியில் அவப்பெயர் ஏற்படுவதோடு, சட்டத்திற்கு முன்பாகவும் குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள். கிறிஸ்துவின் நாமத்திற்கும், அவருடைய சபைக்கும், நம்முடைய நம்பிக்கைக்கும் களங்கத்தை ஏற்பத்தும் எந்த ஒரு செயலையும் ஒரு கிறிஸ்தவன் எந்த ரீதியிலும், எந்தக் காலத்திலும் செய்யவே கூடாது. ஆகவே, அசாதாரணமான சூழ்நிலைகளில், தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை என்பது வேதாகம போதனைக்கு முற்றிலும் இசைவான ஒன்றாகவே உள்ளது.

உதாரணமாக, அப்போஸ்தலர் 8:1-ல் நாம் என்ன பார்க்கிறோம்?... அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பமுண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் **சிதறப்பட்டுப் போனார்கள்.** சிதறுதல் என்றால், தேங்காயை ஓங்கி நிலத்தில் அடிக்கும்போது அதின் எந்தப்பகுதி எந்தப்பக்கம் செல்லும் என்று கணிக்க முடியாமல் போகிறதல்லவா அது போன்ற ஒரு நிலை. அன்றைய அசாதாரண சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் அப்படித்தான் சிதறப்பட்டுப் போனார்கள். அப்படிச் சிதறியவர்கள் எப்படி தேவனை ஆராதித்திருப்பார்கள்? சிதறப்பட்ட இடங்களில் நிச்சயமாகத் தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனைதான் நடத்தியிருக்க வேண்டும். வேறு வழியில்லை.

இன்னும், பத்மு தீவில் நாடு கடத்தப்பட்ட யோவான் (வெளி 1:9) தேவனை எப்படி ஆராதித்திருப்பார்? சகோதர சிநேகமும், கிறிஸ்தவ ஐக்கியமும் அவர் போதித்த, அவர் விரும்பும் ஒன்றுதான். இன்னும் சபையாக விசுவாசிகளோடு கூடி

ஆராதிப்பது அவருக்கு வழக்கமான ஒன்றாகவே இருந்திருக்கும். ஆயினும், அவர் அங்கே தனித்துக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் என்ன செய்திருப்பார்? தனிமையாகத்தான் தேவனைத் தொழுதிருக்க முடியும். சபையாகக் கூடி வருவது பற்றிய உபதேசம் அவர் அறியாததல்ல. ஆனால், வேறு வழியில்லையே. அந்த வாய்ப்பு அவருக்கு மறுக்கப்பட்டதே. சபையாரோடு கூடி வராமல் போனது நிச்சயமாக அவருடைய தவறல்ல.

ஆகையால், அருமையானவர்களே! கொரோனா காலத்தில் நாம் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், சிறுசிறு மந்தையாகக் கூடி தேவனை ஆராதிப்பது வேதாகம போதனைக்கு எதிரான ஒன்றல்ல. காலம் அனுமதிக்கும் வரை நாம் இதைத் தொடரலாம்.

IV **மேலான அதிகாரத்திற்கு கீழ்ப்படிவது காரணம்**

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை சரிதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதற்கான இன்னுமொரு காரணம், ஒரு கிறிஸ்தவன் மேலான சட்டத்திற்குக் கீழ்ப்படிவது அவசியம் என்பது.

கொரோனா காலத்தில் வழிப்பாட்டுத் தலங்கள் தடை செய்யப் பட்டிருப்பதற்கான காரணம் இந்த அரசாங்கம் மதங்களுக்கு எதிரான அரசாங்கம் என்பதால் அல்ல. ஒரு காலத்தில் **கடவுளை மற, மனிதனை நினை** என்ற சித்தாந்தம் உலகின் பல பகுதிகளில் சத்தமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அது போன்ற சித்தாந்தத்தின் வெளிப்பாடாக இந்தத் தடை உலக அரசாங்கங்களிடமிருந்தோ அல்லது இந்திய அரசாங்கத்திட மிருந்தோ வரவில்லை. குறிப்பாக, கிறிஸ்தவ தொழுகைக்கு எதிரான சட்டமாகவும் இது இல்லை. ஒட்டு மொத்த தேச மக்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் சரீர நலன் கருதி போடப்பட்ட ஓர் ஆணை. நாம் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து (யூதா 22) ஒரு சட்டத்தின் நோக்கத்தை சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுகிறவர்களாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலன் பவுல், மேலான அதிகாரம் பற்றிய ஆவியானவரின் அறிவுரையை ரோமர் 13-ம் அதிகாரத்தில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். எந்த மனுஷனும் மேலான அதி காரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால் தேவனாலேயே அன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டா யிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன்; தேவனுடைய

நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்கு தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளு கிறார்கள். (ரோமர் 12:1,2) இன்னும், பேதுரு, அப்போஸ்தலன் நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள் (I பேது 2:13) என்று கூறியுள்ளார். இந்த இரண்டு அப்போஸ்தலர்களும் ஆவியினாலே வெளிப்படுத்தி யுள்ளவைகள் இச்சூழலுக்கு போதுமான விளக்கம் கொடுப்பவைகளாக உள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனை என்பது **கிறிஸ்தவ விசுவாசத்திற்கு** எதிராக அரசாங்கம் இட்ட ஆணையின் விளைவாக நடைமுறைப்படுத்தும் ஒன்றல்ல. மாறாக, தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிற ஓர் அரசாங்கம், தேவன் அவர்களுக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி ஒட்டுமொத்த தேசக்குடிகளின் நலனுக்காகவும், நன்மைக்காகவும் இயற்றிய சட்டம். மறுபடியும் சொல்லுகிறேன். சட்டத்தின் உள்ளான நோக்கத்தை நாம் அறிந்து செயல்பட வேண்டும். இதிலே தெளிவு பெறாமல் நான் எதற்கும் அஞ்சமாட்டேன் என்று செயல்படுவோமானால், தேவனுடைய நியமத்தை எதிர்க்கிறவர்களாக மாறி விடுகிறோம். ஓர் உண்மை விசுவாசி தேவனையும், அவருடைய நியமத்தையும் ஒரு போதும் எதிர்க்கத் துணியக்கூடாது. இங்கே இருக்கும் இன்னொன் றையும் பாருங்கள்; அப்படித் துணிந்தால் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறவர்களாக மாறி விடுகிறோம். அதாவது, தேவன் நம்மைத் தண்டிப்பாராம். ஒருவேளை, நம்முடைய முரட்டுப் பக்தியின் விளைவாக, தேவ தண்டனைக்கு ஆளாகிவிட்டால், அது பயங்கரமான ஒன்றாக இருக்குமே! (எபி 10:31) இது தேவையா?

ஆகையால், அருமையானவர்களே! இந்தக் கோவிட் – 19 காலகட்டத்தில், கிறிஸ்தவர்கள் தேவனுக்குப் பயந்து தனிமைப்படுத்தப்பட்ட ஆராதனையில் பங்குபெறுவது எல்லா வகையிலும் பரலோக தேவனுக்கு ஏற்புடைய செயலே. ஏனைய அநேகரைப் போல் சபை கூடி வருவதின் மாண்பை அறியாமல், வெறுமனே நம்மைத் தனிமைப்படுத்தி வாழாமல், வேத வசனங்களின் உபதேசத்தோடு அந்தத் தனிமைப்படுத்துதலின் காலம் கழிந்து கொண்டிருப்பதற்காகத் தேவனுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இன்னும் எத்தனை வாரங்கள் இந்நிலை நீடித்தாலும் நாம் சேர்ந்து போகாமல், கிறிஸ்துவுக்கும், அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கும் நம்மைச் சமூலமாக ஒப்புக்கொடுத்து நம்முடைய பரலோக பயணத்தைத் தொடர்வோமாக! ஆமென்!! ✝

# புதிய பரிசேயர்களும், சதுசேயர்களும்

Bro. J.C. **சோட்**

**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**

**ஆ**னால், அந்த **மரணம்** ஆண்டவரை சிறைபிடிக்க முடியாமல் அவருக்கு முன் மண்டியிட்டு மறைந்து போனது. காரணம், அவர் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார். அவர், உயிர்த்தெழுந்த பிறகு பிரதான ஆசாரியர்களும் யூதமதத் தலைவர் களும் கல்லறையைக் காவல் காத்த காவலாளிகளுக்கு வெகுமதி என்னும் கையூட்டு கொடுத்து, நாங்கள் நித்திரை பண்ணுகையில் இயேசுவின் சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவரைக் களவாய்க் கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்லச் சொன்னார்கள் (மத்தேயு 28:12,13). இப்படிப்பட்ட மத அமைப்புகளெல்லாம் இயேசு கிறிஸ்துவை எதிர்ப்ப தென்று வரும்போது எப்படிச் சேர்ந்து கொண்டார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இச்சம்பவங்களை எல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கும்போது சொல்லொண்ணாத் துயரமடைந்து இன்றைக்கெல்லாம் அப்படி நடக்கவே கூடாது என்று நினைக்கிறோம். மாறாக, இன்றும் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. எப்படியெனில், இன்று புதிதாக தற்கால பரிசேயர்களும், சதுசேயர்களும் முளைத்திருக் கிறார்கள். கிறிஸ்துவின் சரீரம் மறுபடியும் அவர்களால் உபத்திரவப் படுகிறது. அதினிமித்தம் அவர் மீண்டும் சிலுவையிலறை யப்படுகிறார். யார் இந்த தற்கால பரிசேயர்களும், சதுசேயர்களும், நம்மைச் சுற்றிலுமுள்ள மார்க்கப் பிரிவினைச் சபைகளும், அதன் தலைவர்களும் தான் தற்காலப் பரிசேயர்களும், சதுசேயர் களுகளும். இவர்கள் கிறிஸ்துவின் போதனைகளுக்குப் பதிலாக தனிமனித போதனைகளைத் திணித்து மனிதருடைய போதனைகளைத் திணித்து, அதற்குப் பிரதிநிதிகளாகவும் இருக் கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவத்தை மாசுபடுத்தி அதை வளர விடாமல் தடுத்து அதன் கண்ணியத்தைக் கெடுத்து விட்டார்கள். இப்படிச் செய்து கிறிஸ்து எதற்காக மரித்தாரோ அக்காரியத்தை வேடிக்கையாக்குவதை வாடிக்கையாக்கி விட்டார்கள். இப்படிப் பட்டவர்கள் தாங்கள் போதிப்பதே போதனை என்ற தனித் துவப்பாதையில் பயணிக் கிறார்கள். சிலசமயங்களில் இவர்களுக் குள்ளேயே எதிர்ப்புகளும் கிளம்புகின்றன. ஆனால்,

கர்த்தருடைய சபை அவருடைய வழி போதனை, உபதேசம் என்று வரும்போது, அவர்கள் அனைவரும் துரிதமாக ஒன்றிணைந்து உண்மைச் சத்தியத்தை எதிர்க்கும் தற்காலப் பரிசேயர்களாக, சதுசேயர்களாக இருக்கிறார்கள்.

மார்க்கப் பிரிவினைச் சபைகள் கிறிஸ்துவின் சபையைப் பற்றி எவ்வளவாய் அறிந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டிலும், அதைக் குறித்து எந்தளவுக்கு எரிச்சலடைகிறார்கள் என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அவர்கள் எல்லாச் சபைகளும் ஒன்றுதான் என்று சொல்லி, நீங்கள் எந்தச் சபையில் அங்கம் வகித்தாலும் பரவாயில்லை என்று சொல்லுவார்கள். ஆனால், கிறிஸ்துவின் சபை என்று வரும் போது மாத்திரம் எரிச்ச லடைகிறார்கள். ஏனெனில், இப்படிப்பட்டவர் களெல்லாரும், கிறிஸ்துவின் சபையை ஒரு விகற்பமாகவே பார்க்கிறபடியால், அவர்கள் தொடர்ந்து இச்சபையின் காரியங் களைக் குறித்து தங்கள் ஜனங்களை எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பாக ஒரு வாலிபனிடம் கிறிஸ்துவின் சபையாரோடு ஐக்கியம் கொள்ளுவதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்று எச்சரிக்கப்பட்டது. ஆனால், அந்த வாலிபனோ ஏன் ஐக்கியம் கொள்ளக்கூடாது என்று எச்சரித்தவர்களிடம் கேட்டபோது, அவர்கள் சொன்ன பதில் என்னைத் திகைப்புக் குள்ளாக்கியது. காரணம், கிறிஸ்துவின் சபையார், தங்களைப் பிரத்யோகமாகக் காட்டிக் கொள்பவர்களென்றும், அவர்கள் தங்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்டி, தங்கள் சபை மட்டும் தான் பரலோகம் செல்லும் என்றும், பரலோகம் போவதற்கு தாங்கள் தான் சரியானவர்கள் என்றும் சொல்லிக் கொள்வார்கள் என்றும் சொன்னார்களாம். ஆம், இது உண்மைதான். வேதமும் அப்படியே சாட்சி பகிருகிறது. அதை ஏற்க இவர்கள் மனம் ஏனோ பதறுகிறது.

எல்லா மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரும் பல்வேறு காரியங்களில் வேறுபட்டிருக்கிறார்கள். ஆனால், அவர் களெல்லாரும் ஒன்றிணைந்து, கிறிஸ்துவின் சபை என்று வரும்போது அதை எதிர்க்கிறார்கள். ஏன் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்? வேதாகமத்தில் இடம்பெறாத காரியங்களை நாம் போதிக்கிறோமா? வேதவசனத்துக்குப் புறம்பான பெயரை நாம் தரித்திருக்கிறோமா? கிறிஸ்துவின் சபையை விட மேலான சபை

ஒன்று தான் இவ்வுலகில் இருக்க முடியுமா? கிறிஸ்துவின் சபையார் வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுவதில் என்ன தவறு இருக்கிறது?

மனிதர்கள் சொல்வதை, மதப்போதகர்கள் சொல்வதை மறந்து விடுங்கள். கிறிஸ்துவின் சபையை அலசி ஆராய்ந்து பாருங்கள்? எங்களைச் சந்தித்து எங்களோடு வேத வாக்கியங்களைப் படிக்குமாறு உங்களை அன்போடு அழைக்கிறோம். வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற சபை, **நாங்களா** என்று ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் செய்யும்படியாக நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் அது தான். நீங்கள் அப்படிச் செய்தால் தேவன் அதிலே மகிமைப்படுவார். நாங்களும் உங்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்வோம். ஏனென்றால், நாங்கள் எல்லா நேர்மை யோடும் சரியாக இருந்து கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்புகிறோம். இதினிமித்தம், நாங்கள் உண்மையானவர்கள், தேவனுடைய வார்த்தையை மாத்திரம் போதிப்பவர்கள் வேதாகமத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் சபையார் நாங்கள் தான் என்று நீங்கள் கண்டறிந்தால், அந்த மகிமையான கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும் படி ஆண்டவர் நாமத்தில் அழைப்பு விடுக்கிறோம். ஆனாலும், முடிவு உங்கள் கையில்தான் இருக்கிறது.

**இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு. இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்** (அப்.22:16;2:47).

✝

**ந**ம் மனது கோபம், பகையுணர்வு பொறாமை போன்றவைகளை சுமக்கும் குப்பைத் தொட்டி அல்ல. ஆனால், சந்தோஷம் மற்றும் இனிமையான நினைவுகளைப் பாதுகாக்கும் பொக்கிஷப் பெட்டியாகும்.

பெண்கள் பகுதி

# புதிய ஏற்பாடு வினா, விடை

Sis. ரேச்சல் இராஜநாயகம்

தொடர்ச்சி...

31. இயேசுவின் வாழ்க்கை வரலாறு கூறும் நான்கு புத்தகங்களின் பெயர். **மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்.**

32. இயேசு எங்கே பிறந்தார்? **பெத்லகேமில்**

33. அவர் எங்கே வளர்ந்தார்? **நாசரேத்தில்**

34. இயேசு வருகிறார் என்று முன்னறிவித்து, பிரகடனம் செய்தது யார்? **யோவான் ஸ்நானன்.**

35. தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் மொத்தம் எத்தனை பேர்? **14, மத்தியாஸ், பவுலையும் சேர்த்து.**

36. இன்றைக்கு மதங்கள் என்று சொல்லப்படும் எல்லாவற்றிற்கும் அனுமதி கிடைத்திருக்கிறது. இயேசு தன்னைப் பற்றி என்ன சொன்னார்?
''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்'' என்று சொன்னார்.

[II தெசலோனிக்கேயர் : 1:7–9]: ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத் தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சிரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது....

அவராலேயல்லாமல் இரட்சிப்பு இல்லை. யோவான் 8:24, தானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.

மத்தேயு:7:21–23: பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பவனேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

37. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார்.

சபை

38. இயேசு எதைக் கட்டுவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினார்? **அவருடைய சபையை (மத் : 16:18-20).**

39. சபை அல்லது தேவனுடைய குடும்பம் எப்போது ஸ்தாபிக்கப் பட்டது?
பெந்தகோஸ்தே நாளில் ஏறக்குறைய கி.பி.29-ல் ஸ்தாபிக்கப் பட்டது.

40. எங்கே? **எருசலேமில்.**

41. யாரால்?
இயேசு கிறிஸ்துவால், அப்பேஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டதின் மூலமாக. (அப்:2).

42. சபையைக் குறிக்கும் வேறு பெயர்கள் என்னென்ன?
தேவனுடைய சபை - (அப் 20:28).
கிறிஸ்துவின் சரீரம் - (I கொரி : 12:27).
கிறிஸ்துவின் மணவாட்டி - (வெளி : 21:9).

சபை - (அப் : 2:47).
மார்க்கம் - (அப்:9:2).
கிறிஸ்துவின் சபையார் (ரோமர் 16:16).
கிறிஸ்துவின் குடும்பம் - (எபே:3:14,15).

43. எல்லா பிரிவினைக் கூட்டங்களிலும் உள்ளவர்கள் இரட்சிக்கப் பட்டவர்களா? கிறிஸ்து ஒரே ஒரு சபையைத்தான் ஆரம்பித்தார். மற்றவைகள் அனைத்தும் அவர் வார்த்தையை மீறி உள்ளடக்கப் பட்டவைகள்.

44. யாராவது ஒருவர் வந்து இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டால், என்ன பதில் சொல்வீர்கள்? (வசன ஆதாரத்துடன்).

1. சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும். (ரோமர் 10:17).
2. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். (மாற்கு : 16:15,16).
3. பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். (லூக்கா: 13:3; அப்: 2:38).

4. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். [மத் : 10 : 32 ; அப் : 8 : 37].

5. பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். அப் : 2:38 ; ரோமர் : ரோமர் : 6 : 3,4].

45. ஆராதனைக்கென்று சபை எப்பொழுது கூட வேண்டும்? [I கொரி : 16:2].

46. வாரத்தின் முதல் நாளில் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட, ஆராதனையின் ஐந்து பங்குகள் என்னென்ன ?

1. **பாடல் :** [எபே: 5:19 ; கொலோ : 3:16 ; எபி : 2:12]

2. **ஜெபம் :** [I தெச :5:17, I யோவான் 5:14,15

3. **தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்வது** [பிரசங்கம்] **:** [I தீமோ : 3:16, 17].

4. **கர்த்தருடைய பந்தியில் கையிடுவது :** [மத்தேயு 26:29 ; I கொரி : 11 : 2329].

5. **காணிக்கை :** [I கொரி : 16:2 ; 2கொரி : 9:6–8]

47. புதிய ஏற்பாட்டில் ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாடு உள்ளதா? – இல்லை. கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனப்பகுதிகள் இசைக் கருவிகள் ஆராதனையில் பயன்படுத்தப்படவில்லை என்பதற்கு ஆதாரமாக உள்ளன.

1. அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலி வலிமைக்குப் புறப்பட்டுப் போனார்கள். [மத் 26:30].

2. நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவைகள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். [அப்:16:25].

3. ..... நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன். [I கொரி 14:15].

4. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி [எபே :5:19].

5. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி [கொலோ: 3:16].

6. உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபை நடுவில் உம்மைத் துதிப்பாடுவேன் என்றும் [எபி :2:12].

7. உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக் கடவன். ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக் கடவன் [யாக் : 5:13].

8. எப்பொழுது இசை சேர்க்கப்பட்டது? 1054 –ல், [11 ம் நூற்றாண்டில்], கத்தோலிக்க சபை, கிரேக்க ஆர்த்தோடக்ஸ் சபை, மேலும் ரோமன் கத்தோலிக்க சபை இவைகளில் பிரிவினைகள் வந்தபோது இசை ஆராதனையில் சேர்க்கப்பட்டது.

48. சபையினுடைய அடிப்படை வேலைகள் எவைகள்?

1. சுவிசேஷத்தை பிரசங்கித்தல். [மத் : 28:18 மாற்கு 16:15].

2. கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்துதல்.[ரோமர் 14:19, I தெசலோ : 5:11].

3. தேவையில் இருப்போருக்கு உதவுதல்: [அப்: 4:32–37II கொரி. 8:1–9 கலா: 6 :10]

49. எபே : 4:4–6: உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே.......... அழைக்கப்பட்டதுபோல....... உண்டு. ....... நீங்கள் ஒரே ...... அழைக்கப்பட்டதுபோல ......... எல்லாருக்கும் .......... உண்டு. அவர் எல்லார் மேலும், எல்லாரோடும்.

50. புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அப்படியே கிறிஸ்துவும்..... அன்பு கூர்ந்து தன்னையே .....க்காக கொடுத்தார். தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் ....... சுத்திகரித்தார். கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்.....மகிமையுள்ள சுவையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்குத்.... அதற்காக....அருமையான சகோதரிகளே நல்ல கிறிஸ்தவைப் பெண்களாக வாழ நமக்கு வேத அறிவு மிகவும் அவசியமாகிறது. இந்த வினா விடை பகுதிகளை படிந்து முடிந்தால் மனப்பாடம் செய்து வைத்துக் கொள்வோம்.

தேவன் தம்முடையபெரிதான இரக்கத்தினால் நம்மை இக்காலங்களில் காத்துவருகிறார். கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம். அவர் சொல்லிய வசனங்களின்படி வாழ்வோம். தேவன் எப்போதும் நம்மேல் அன்பும், தயவும், பொறுமையுள்ளவராகவே இருக்கிறார். தேவன் செய்த சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். நமக்கு ஈவாக கொடுத்த தம் ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். பரிசுத்த ஆவியினால் எழுதிக் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேத எழுத்துக்களுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். இவ்வளவு ஈவுகளை பெற்ற நாம் திரும்ப என்ன செலுத்துகிறோம்???? ஆமென். ✝

# தானியேலைப் போல

Dr. ஏபில் நாயகம்

**வா**ழ்க்கையில் முன்னேற வேண்டும், அனைவரும் மெச்சத் தக்க ஒரு நல்ல நிலையை அடைய வேண்டும் என்ற ஆசையில்லாதவர்களைக் காண்பது அரிது. குறிப்பாக, வாலிபப் பருவத்தில் இருப்பவர்கள் தாங்கள் வேலை செய்கிற இடத்திலோ, நண்பர்கள் மத்தியிலோ சிறந்து விளங்க வேண்டும் என்று நினைப்பது வழக்கம். அதிகச் சம்பாத்தியம் வேண்டும், அப்பொழுது தான் முன்னேற முடியும் என்ற நினைப்போடு இருப்பார்கள். ஆனால், சிலர் அந்த முன்னேற்றத்தை அடைவதற்கும் அதிகமாக சம்பாத்தியம் பண்ணுவதற்கும் சில தவறான வழிகளைத் தெரிந்துகொள்வதை நாம் பார்க்க முடியும். அதிலும் குறிப்பாக, கிறிஸ்தவ வாலிபர்கள் தங்கள் கொள்கை களுக்க மாறாகவும், விசுவாசத்திற்கு விரோதமாகவும் இருக்கும் சில காரியங்களைத் தங்கள் சுய லாபத்தை அடையவேண்டு மென்பதற்காகச் செய்கிறதை நாம் பார்க்க முடியும். ஒருவேளை முன்னேற்றத்தை அடைய, பலருடைய அங்கீகாரம் கிடைக்க அவர்களைப் போல நாமும் இருக்க வேண்டுமா? என்ற கேள்வி நிச்சயம் நமக்கு வரும். மேலதிகாரிகளின் கண்களில் தயவைப் பெற நம் கொள்கைகளையும், நம் விசுவாசத்தையும் புறக்கணிப்பது தேவனுடைய கண்களில் நமக்கு கிடைக்கும் தயவை இழக்கச் செய்கிறது.

நாம் முன்னேறுவதற்கு தேவனுடைய இரக்கமும், தேவ தயவும் தேவை என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது. நம் கொள்கைகளைக் கைவிடாமல், விசுவாசத்தை விட்டு விலகாமல் தேவனின் துணையோடு நாம் தேடுகிற முன்னேற்றத்தை வாழ்க்கையில் நிச்சயம் அடைய முடியும். அதற்கான சிறந்த உதாரணம் தானியேல். தன்னைத் தீட்டு படுத்திக் கொள்ளாமல் தன் கொள்கையில் உறுதியாய் இருந்த தானியேலை தேவன் உயர்த்தினாரே! அந்தத் தேவனுக்கு உங்களையும் என்னையும் உயர்த்துவது லேசான காரியம். தேவன் தானியேலை உயர்த்தக் காரணம் என்ன?

தானி. 1:8– ல் **தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சை ரசத்தினாலும் தன்னை தீட்டுப்படுத்தலாகாது என்று தன் இதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டான்** என்று வாசிக்கிறோம். ஒரு புதிய இடத்தில் இருந்த தானியேல் எதைப்பற்றியும் கவலைப்படாமல், தன் கொள்கையில் உறுதியாக இருந்ததைப் பாருங்கள். அவன் அப்படிச் செய்யவேண்டும் என்பது ராஜாவின் சட்டமாக இருந்தாலும், தான் அதைச் செய்யக் கூடாது என்ற தீர்மானத் தோடு இருந்தான். வாலிபர்களே! நாம் இருக்கிற இடங்களிலோ, கல்லூரிகளிலோ, வேலை செய்கிற ஸ்தலங்களிலோ எப்படி இருக்கிறோம்? யார் என்ன சொன்னாலும், என்ன நடந்தாலும் தேவன் வெறுக்கிற காரியங்களைச் செய்யமாட்டேன் என்ற தீர்மானத்தோடு நாம் இருக்கிறோமா? அல்லது மனம் போன போக்கிலே சென்று முன்னேற அதிக சம்பாத்தியத்திற்கும், நண்பர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து விட்டு, எந்த ஒரு தீர்மானமும் இல்லாமல் இருக்கிறோமா?

தானியேல் தன்னை போஜனத்தினாலும், திராட்சை இரசத்தினாலும் தீட்டுபடுத்தாதபடி பிரதானிகளின் தலைவ னிடத்தில் வேண்டிக் கொண்டான். அதாவது, தன்னுடைய கொள்கைகளை முன்னமே கூறிவிட்டான். பல சமயங்களில் அதை நாம் செய்வதில்லை. நண்பர்களின் கூட்டத்தில் இருக்கும் போது, வேலை செய்யும் இடங்களிலும், நம்முடைய கொள்கையை முன்னிறுத்துவதில் நாம் தயக்கம் காட்டுகிறோம். அந்தத் தயக்கம் பின்னர் பாவத்திற்குள் நம்மைப் புகுத்தி விடுகிறது. எனவே, நாம் யார், நம் விசுவாசம் எப்படிப்பட்டது, நம் கொள்கை என்ன என்பதை பிறரிடம் சொல்ல நாம் தயங்கக் கூடாது.

தானியோல் தன் வேலையில் மிகவும் கவனமாயிருந்தான். எந்த ஒரு தவறையும் செய்யாமல் தன் வேலைகளைச் சிறப்பாக செய்து வந்தான். தானி 6:1–4 வரை வாசித்தால் அதை கவனிக்க முடியும்.தேசாதிபதிகளும் தானியேலை குற்றப்படுத்த முயன்றார்கள். வசனம் 4 ல், .... அவன் உண்மையுள்ளவனாக இருந்தபடியினால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும் இன்றளவும் காணப்படவில்லை என்று வாசிக்கிறோம். ஆம் வாலிபர்களே! தானியேல் தான் வேலை செய்த இடத்தில் எந்த ஒரு குற்றமும் இல்லாமல் உண்மையானவனாக இருந்தான். நாம் வேலை செய்கிற இடத்தில் எப்படிபட்டவர்களாக இருக்கிறோம்?

இங்கே, தேவன் தானியேலை உயர்த்தினார். அவனுக்குப் பணி உயர்வு கிடைத்தது. அதற்கான காரணம் அவன் உண்மையாயிருந்தான். எந்த ஒரு குற்றத்தையும் செய்யாமல் இருந்தான்.

இன்று பலர் தங்களுக்கு பணி உயர்வு வேண்டும், முன்னேற வேண்டும் என்று எண்ணி, குறுக்கு வழிகளையும், மனிதனைப் பிரியப்படுத்தும்படியான வழிகளையும் தேடுகிறார்கள். ஆனால், தேவனுடைய பார்வையில் தயவு கிடைக்க உண்மையாகவும், குற்றமற்றவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை மறந்து விடுகிறார்கள். தங்கள் சொந்த முயற்சிகளையும் பாவமான வழிகளையும் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி, தேவனையும் அவருடைய தயவையும் மறந்து விடுகிறார்கள்.

வாலிபர்களே! நாமும் தானியேலைப் போல பாவத்திற்கு எதிர்த்து நிற்கத் தீர்மானம் கொண்டு, உண்மையாயிருந்து அதன் மூலம் நம் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்போம். தேவன் நம் நடைகளை ஸ்திரப்படுத்துவாராக! ✝

## பரமப்பிதா

பரமப்பிதா உங்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயம்

(லூக்கா 11:13)

பரமப்பிதா உங்களுக்கு வேண்டியவைகளை அறிந்திருக்கிறார்

(மத்தேயு 6:32)

பரமப்பிதா உங்களுக்கு பிழைப்பூட்டுகிறார்

(மத்தேயு 6:28)

பரமப்பிதா உங்களுக்கு மன்னிப்பார்

(மத்தேயு 6:14)

பரமப்பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும்

(மத்தேயு 15:13)

சிறுவர் பகுதி

# தாலந்துகள்

Dr. பிரெய்ஸி

**ஹாய் குட்டீஸ், எப்படி இருக்கீங்க!**

**நீ**ங்கள் எல்லாரும் கெட்டிக்கார குட்டீஸ் என்று எனக்குத் தெரியும். கொரோனா காலத்தில் பாதுகாப்பாய் இருக்கிறீர்களா? பெற்றோர் சொல்படி கேட்டு நடந்து கொள்ளுங்கள்.

சரி, இம்மாதம் நீங்கள் சிந்திக்கத்தக்க மிக முக்கியமான ஒரு காரியம் குறித்துப் பார்க்கப் போகிறோம். நாம் பார்க்கப் போகும் பாடம் மத்தேயு 25:14–30 வசனங்களில் இடம் பெற்றுள்ளது. அதற்குள்ளாக நாம் செல்லுவதற்கு முன், வேதாகமத்தை நீங்கள் எடுத்து இவ்வேத பகுதியை ஒரு முறை வாசித்து விடுங்கள்.

சரி, நீங்கள் இப்பொழுது வாசித்து முடிந்துள்ளபடியால் அதில் இடம் பெற்றுள்ள சம்பவம் என்ன என்று உங்களுக்குத் தெரியும். வேறொன்றுமல்ல, அது தாலாந்து பற்றியது தான்.

நீங்கள் உன்னிப்பாகக் கவனித்தால், முக்கியமான சிலவற்றை இங்கே புரிந்து கொள்ள முடியும். இந்த உவமையில் ஒரு எஜமான் தூர தேசத்துக்குப் போகிறார். அப்படிச் செல்லும் போது, அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக தாலந்துகளைக் கொடுத்துச் சென்றார். போனவர் திரும்பி வருகிறார். அந்த எஜமான் திரும்ப வந்து அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளை அவர்கள் ஒவ்வொருவரும் எப்படிப் பயன்படுத்தினார்கள் என்று வேலைக்காரர்களிடம் உவமையில் கேட்டது போல, **நம்முடைய எஜமானாகிய இயேசு** திரும்ப வரும்போதும் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகள் பற்றி நம்மிடம் கணக்குக் கேட்பார்.

ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாத் தாலந்துகளும் இருக்காது. தேவனுடைய விருப்பப்படி ஒவ்வொரு குழந்தைக்கும் அவரவர் திராணிக்குத்தக்கதாக தாலந்துகள் கொடுக்கப்படும். எப்படி வேலைக்காரர்களுக்கு ஐந்து தாலந்துகள், இரண்டு தாலந்துகள், ஒரு தாலந்து என்று கொடுக்கப்பட்டதோ அது போல.

ஒரு தாலந்து பெற்றவன் அதை மண்ணில் புதைத்து வைத்து வீணாக்கியது போல நம்மிடம் கொடுக்கப்பட்ட தாலந்துகளாகிய திறமைகள் வீணாவதை பரலோக தேவன் ஒருபோதும் விரும்ப மாட்டார். அப்படி வீணடிப்பவர்களில் தேவன் பிரியப்படவு மாட்டார். அவர்களை ஆசீர்வதிக்கமாட்டார். நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தாலந்தையும் நாம் தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இங்கே ஒரு கனிவான வேண்டுகோள். கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த குழந்தைகளுக்கு என்னென்ன தாலந்துகள் இருக்கிறதென்று கண்டுபிடியுங்கள். இந்த விடுமுறை நாட்களில் தேவன் மகிமைப்படும் படியாய் அவைகளைப் பெருக்க உதவி செய்யுங்கள்.

பெற்றோர்களே! குழந்தைகள் பெற்றிருக்கும் ஒவ்வொரு தாலந்தும் முக்கியம். ஏனெனில், அவைகள் தேவனால் கொடுக்கப்பட்டவை.

குழந்தைகளே! உங்கள் தாலந்துகள் பாடுவதாக, எழுதுவதாக, ஓவியம் வரைதலாக, வண்ணம் தீட்டுவதாக, மனப்பாடம் செய்வதாக, பிறருக்கு உதவுவதாக என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒவ்வொரு தாலந்தையும் விருத்தியாக்கி தேவ மகிமைக்காகப் பயன்படுத்துங்கள். சரியா?

விடுமுறை நாட்களை வீணாகக் கழிக்காமல் மகிழ்ச்சியாயிருந்து, பயன்படுத்துங்கள்.

அன்புடன்
பிரெய்ஸி அக்கா! ✝

**இவ்வுலகில் நாம் ஒருபோதும் படித்து தீராத புத்தகம் வேதாகமம் மட்டுமே. இது காலத்தைக்கடந்தும் இன்றும் உயிரோட்டமுடையதாயிருக்கிறது. இவ்வுலகில் காணப்படும் எந்த ஒரு புத்தகத்தின் ஆசிரியரும் இன்று உயிரோடில்லை. ஆனால், வேதாகமத்தின் ஆசிரியரான தேவன் என்றென்றும் ஜீவிக்கிறார்...**

# உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே! சங் 27:8

Bro. K. M. பிலிப்

அன்பான வாசகர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். சென்ற மாத இதழில் தேவன் கடந்த நாட்களை யெல்லாம் அவருடைய பிள்ளைகளாகிய நம்மை காண்கிற தேவனாயிருந்து எல்லா இக்கட்டுகளுக்கும் நம்மை விலக்கிக் காத்து வருகிறார்; இதுவே நம் விசுவாசம், தைரியம், சமாதானம், சந்தோஷம் என்று பார்த்தோம். இம்மாதம் தேவன் தொடர்ந்து நம்மேல் கண்ணை வைத்து, ஆலோசனை சொல்லவும், அவர் நமக்குப் போதித்து நாம் நடக்க வேண்டிய வழியைக் காட்டவும் [சங்32:8] நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை ஆலோசிப் போம். அதன்படி செய்து நித்தியமான சந்தோஷத்தையும், சமாதானத்தையும், முடிவில் நித்திய ஜீவனையும் பெற தேவன் நமக்கு பெலன் கொடுப்பாராக.

தேவனின் படைப்பில் உயிருள்ள யாவும் தேவனுடைய முகத்தைத் தேடுகிறது. எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது [145:15] என்றும் சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக [150:6] என்றும் வேதம் தெளிவாய் கூறுவதன் மூலம், ஓரறிவு, ஈரறிவு.... உடைய படைப்புகளே படைத்த தேவனை நன்றியோடு நோக்கிப் பார்க்கிறதென்றால் ஆறறிவு பெற்ற மனிதர்களாகிய நாம் எவ்வளவாய் தேவ முகத்தைத் தேட வேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள். சிந்தித்த தாவீது உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று உறுதிபடக் கூறுகிறார். மேலும், முகத்தையே தேடுவேன் என்பதில் அவரது ஏக்கம் தெரிகிறது. அந்த ஏக்கத்தால் தான் தாவீதின் வாழ்க்கையில் எல்லாம் வெற்றியே. நான் கர்த்தரைத் தேடினேன். அவர் எனக்கு செவி கொடுத்து, என்னுடைய எல்லா பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார் [சங் 34:4]. ஆம், அவரிடம் பயமே இல்லை; மற்றவர்களின் பயத்தையும் நீக்கினார். முகத்தையே தேடுவேன் என்பது தாவீதின் வாயிலிருந்து வரவில்லை. ....என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று[சங்:27:8] என்கிறார். இப்படி முழு இருதயத்தோடும் தேவனைத் தேடியதால் அவன் இருதயம் மகிழ்ந்தது[105:3]

பிரியமானவர்களே! தேவ முகத்தைத் தேடுவதற்கு கால நேரத்தைக் கணக்கிட்டு, ஐம்பது, அறுபது வயதாகட்டும்; குடும்ப

பிரச்சனைகள் தீரட்டும், படிப்பு முடியட்டும்... என்று தள்ளிப் போட வேண்டாம். இப்பொழுதே அனுக்கிரக காலம்; இப்பொழுதே இரட்சண்யநாள் [I கொரி 6:2] கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். [ஏசா 55:6] ஏனெனில், அவருடைய கோபக்கினையின் மகாநாள் வரும் போது யார் நிலை நிற்கக் கூடும். [வெளி 6:16] மட்டுமல்ல. நீங்கள் நினையாத நாழிகையிலே மனுசகுமாரன் வருவார். ஆதலால், நீங்கள் [எப்பொழுதும்] ஆயத்தமாயிருங்கள் [மத் 24:44] என்று வேதம் எச்சரிப்பதால் நாம் நித்தமும் தேவ சமூகத்தையே தேடுவதில் விழிப்பாயிருப்போம்.

என்னைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள். ஆமோஸ் 5:4] என்று தேவன் தன்னுடைய ஜனத்திற்கு அழைப்பைக் கொடுக்கும் ஒரு சரித்திரத்தைக் கவனிப்போம். II நாளா 13:1–18 ல், தேவனுடைய முகத்தையே தேட வேண்டும் என்ற எச்சரிப்பை அசட்டை செய்த இஸ்ரவேல் கோத்திரத்தின் இராஜா யெரெபெயாம் தன்னிடமுள்ள 8 லட்சம் வீரர்களின் பெலத்தின் மீது நம்பிக்கை வைத்து 4 லட்சம் வீரர்களைக் கொண்ட யூதாவின் ராஜாவான அபியா மீது படையெடுத்தான். ஆனால், தேவனுடைய முகத்தையே எப்பொழுதும் தேடும் அபியாவோ, எங்களுக்கோ கர்த்தரே தேவன் என்றும் [10] தேவன் எங்கள் சேனாதிபதி என்றும்[12]. தேவனை நோக்கி கூப்பிட்டு [14] தேவனையே சார்ந்திருந்தபடியால் [18] தைரியமாய் இஸ்ரவேலை எதிர்த்து 5 லட்சம் வீரர்களை சங்கரித்து வெற்றி பெற்றான். மேலும், அபியாவும், யூத ஜனமும் தங்கள் முழு இருதயத்தோடும் ஆணையிட்டு, தங்கள் முழுமனதோடும் கர்த்தரைத் தேடினார்கள். கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு சுற்றுப்புறத்தாரால் யுத்தம் இல்லாதபடிக்கு அவர்களை இளைப்பாறப் பண்ணினார். [15:15] நாம் தேவ பிள்ளைகளாக இருந்தாலும் போராட்டங்கள் மத்தியில் தேவனுடைய முகத்தைத் தேடுவதில் உறுதியாய் இருந்தால் நிச்சயம் நம் இருதயத்தில் இளைப்பாறுதலைப் பெற முடியும்.

இப்படி தேவ முகத்தைத் தேடியதால் இருதயம் மகிழ்ந்த அன்னாளை முன் நிறுத்தி நோக்குவோம். [I சாமு 1:20] அன்னாள் பண்டிகைக்காக குடும்பமாக தேவாலயத்திற்கு சென்றிருந்த போதிலும், கணவன் எல்க்கானா அவளை அதிகமாய் நேசித்த போதும், தாய் என்று ஸ்தானம் அவளிடத்தில் வெற்றிடமாய் இருந்தது. அது அவளுக்கு வெட்கத்தையும், அவமானத்தையும் ஏற்படுத்தியதால் அவள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருந்தது. ஆனாலும், அன்னாள் ஒரு சரியான முடிவெடுத்தாள். அவள் மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம்

பண்ணினாள் (10). விண்ணப்பத்தைக் கேட்ட தேவன் அவள் துக்கம் நீங்கி எப்பொழுதும் இருதயம் மகிழும்படியாக வெட்கத்திற்கு பதில், எதிர்காலத்தில் இராஜாக்களையே உருவாக்கும் சாமுவேலை (தீர்க்கதரிசி) குழந்தையாக கொடுத்து, பெருமைப்படுத்தி குறைவை நிறைவாக்கினார். நாமும் கூட நம் துக்கத்தை மனதிலேயே பூட்டி வைத்து மகிழ்ச்சியை இழந்து விடதபடி, ஜெபத்தின் மூலமாக தக்க சமயத்தில் தேடுவோம்; மகிழ்ச்சியைக் கண்டடைவோம். கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக (105) என்ற வார்த்தை நம்மில் நிறைவேறுவதாக.

இப்படி இளைப்பாறுதலும் மகிழ்ச்சியும் நிறைந்த நம் வாழ்க்கையில் கூட எதிர்பாராத பிரச்சனைகள் வரும். கோலியாத் நம்முன் நிற்பான்; செங்கடல் அலைமோதும்; எரிகோ கோட்டை எழுந்து நிற்கும். இப்பொழுது நம்நிலை என்ன? II இராஜா 4:7-ன் நிகழ்ச்சியை கவனிப்போம். கர்த்தருக்கு பயந்து நடந்த ஒரு தீர்க்கதரிசி இறந்து போனான். அவனின் மனைவியிடம் தன் இரண்டு குமாரர்களையும் கடன் கொடுத்தவன் தனக்கு அடிமை களாக்கிக் கொள்ளும்படி அவளிடம் வந்து வற்புறுத்தினான் கணவனையும் இழந்து, உயிரோடு பிள்ளைகளையும் இழப்பதென்றால், ஒரு தாயின் உள்ளம் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும். இப்படித் தனக்கு முன் எழும்பி நிற்கும் இப்பிரச்சனையைச் சந்திக்க அவள் தேவ மனிதன் எலிசாவிடம் சென்றாள். தன் பிரச்சனையை எலிசாவிடம் சொன்னால் தன்னிடம் உள்ளதையும் சொன்னாள். அப்பொழுது தேவ மனிதன் சொன்னதை தேவ வார்த்தையாகவே ஏற்றுக் கொண்டு, விசுவாசத்தோடு செயல்பட்டாள். அண்டை வீடுகளிலிருந்து வாங்கி வந்த காலி பாத்திரங்களில் தன்னிடமிருந்த ஒரே ஒரு குடம் எண்ணையை விசுவாசத்தோடு ஊற்றிக்கொண்டே இருந்தாள். எல்லாப் பாத்திரங்களும் நிரம்பியது. மீண்டும் தேவ மனிதன் சொன்னபடி அந்த எண்ணையெல்லாம் விற்று கடன் முழுவதையும் கட்டித் தீர்த்துக் கொண்டாள். மீதம் இருந்த எண்ணையைக் கொண்டு தானும் தன் பிள்ளைகளும் தொடர்ந்து வாழ்க்கூடிய வழியையும் பெற்றுக் கொண்டாள். தடைகள் தகர்த்தெறியப்பட்டது. அதே ஊரில் அவளும் அவள் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணினார்கள்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. (சங் 23:5) என்பது இவளுடைய வாழ்க்கையில் எவ்வளவு உண்மை என்று பாருங்கள். தேவ ஜனமே, நாம் தேவ பிள்ளைகளாயிருந்தாலும் போராட்டங்கள் மத்தியில் தேவனு டைய முகத்தைத் தேடுவதில் உறுதியாய் இருந்தால் நிச்சயம் நம் இருதயத்தில் இளைப்பாறுதலை, ஆறுதலைப் பெற முடியும்.

நீடித்த நாட்களால் நம்மை திருப்பத்தியாக்கி, கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்போம்.

தேவனுடைய முகத்தை முதலில் தேடுவோம் [மத் 6:33] எவனாகிலும் 30 நாள் வரையில் இராஜாவாகிய தன்னைத்தவிர எந்த தேவனையானாலும் வணங்கக்கூடாது. மீறுபவர்கள் சிங்கக் கெபியில் போடப்படுவார்கள் என்று தன் நாடு முழுவதும் தரியு ராஜா கட்டளையிட்டிருந்தான். தானியோலோவென்றால் இதை அறிந்த போதிலும் தன் வீட்டிற்கு போய் வழக்கம் போல் பல கணிகள் திறந்திருக்க எருசலோமுக்கு நேரடியாக தினம் மூன்று வேளையும் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினான். தேவனுக்குக் கொடுக்க வேண்டிய முதலிடத்தை கொடுப்பதில் உறுதியாய் இருந்தான். முதலிடம் கொடுத்த தானியேலை சிங்கக் ஜெபிக்குள் போடுமுன் முதலாவதாக தேவன், தேவ தூதனை அனுப்பி சிங்கங்களின் வாய்களைக் கட்டிப் போட்டார். மேலே தூக்கிவிடப்பட்ட தானியேல் இராஜாவின் சிங்காசனத்தின் அருகிலே அமர்த்தப்பட்டான். அது மட்டுமல்லாமல் தானியேலின் தேவனே ஜீவனுள்ளவர், என்றென்றைக்கும் நிலைத் திருக்கிறவர்; அவரே தப்புவிப்பவர்; அவரே இரட்சிக்கிறவர் என்று இராஜாவோடு அந்த தேசமே தேவனை மகிமைப் படுத்திற்று. நம் வாழ்க்கையிலும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து அதிகாலையில் தேடி, வாரத்தின் முதல் நாள்தோறும் சபையிலும் தேடுவோமானால் தேவ நாமம் நம்மால் மகிமைப்படும்; அநேகர் இரட்சிக்கப்பட வழிவகுக்கும்.

பிரியமானவர்களே! நாம் பூமிக்குரிய அழிந்து போகிறதை அல்ல மேலானதைத் தேடுவோம். கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடுவோம் [பிலி 2:21] இயேசு தேவாலயத்திற்குள் பிரவேசித்த போது அங்கு தேவனைத் தேடும்படியாய் வந்து அமர்ந்திருந்த சூம்பின கையுடைய ஒரு மனிதனைப் பார்த்தார். அவனை நோக்கி உன் கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான், அவன் கை மறுகையைப் போல் சொஸ்தமாயிற்று [மாற்று 3:1–5] அன்பானவர்களே, தன்னிடத்தில் குறை இருந்த போதிலும் மேலானதைத்தேடி தேவாலத்திற்குள் வந்தபடியால் தேவன் அவனுடைய இவ்வுலகத் தேவைகளை சந்தித்தார். நாமும் மேலான பரலோகத்திற்குரியதை நாள்தோறும் தேடுவோம். இப்பூமிக்குரிய நம் தேவைகளை தேவன் சந்திப்பார். வேதம் வாசிப்பதில், தனி ஜெபத்தில், குடும்ப ஜெபத்தில், சபை வளர்ச்சியில் தொடர்ந்து தேவ முகத்தையே தேடுவோம். கர்த்தர் தம்முடைய முகத்தை [உன்] நம்மேல் பிரகாசிக்கப் பண்ணி [உனக்கு] நமக்குச் சமாதானம் கட்டளையிடுவாராக [எண் 6:26]. ஆமென். ✝

# மரணம் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது

பென்னி மார்ட்டின்

இவ்வுலகில் மனிதஇனத்தால் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாத ஒன்று உண்டானால் அது மரணந்தான். மரணத்தை மறுப்பதற்கும், அதை மறப்பதற்கும் மருந்து கண்டுபிடிக்க மண்டியிடக்கிடக்கிறது, இந்த மனித இனம் நம் பிறப்பிலிருந்தே மரணம் நம்மை நிழலைப் போல துரத்திக்கொண்டு வருகிறது. அதை விரட்டவோ, மிரட்டவோ செய்வதற்கு முன்பாக மனித இனத்தை அது புரட்டிப் போட்டுவிடுகிறது. மரணம் மனித இனத்தை எவ்வித பட்சபாதமும், பட்சதாபமுமின்றி பதம் பார்த்துவிடுகிறது. மனிதனுக்கு இருக்கும் மிகப்பெரிய பயம் மரணபயம் தான். இருந்த போதிலும், சில மனிதர்கள் தாங்கள் மரணத்தை துச்சமாக நினைப்பதாகவும் அதைக்குறித்து அச்சப்படுவதில்லை என்றும் வீரவசனம் பேசுவார்கள். இன்னும் சிலர், ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்று சொல்லி முண்டியடித்துக்கொண்டு போய் காரியங்களைச் செய்வதை நாம் கண்டு வருகிறோம். இம்மரண பயத்தை முன்பெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது கொரோனா கொள்ளை நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும் இந்த நாட்களில் அதிகமாக பார்க்க முடிகிறது. அதே நேரத்தில் மரணம் என்று ஒன்று இல்லாதது போல் உலகத்தின் தத்துவஞானிகளில் சிலர் பொத்தாம் பொதுவாக தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்கள். அது ஒருபுறமிருக்க வானுலகத்தின் வாரிசுகள் என்று வாய்வலிக்க சொல்லிக் கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கும் மரணத்தைப்பற்றி சரியான பார்வை இல்லாமலிருப்பது வேதனையிலும் வேதனையாகும். சரி, இப்போது மரணத்தைப் பற்றி தேவன் என்ன சொல்கிறார் என்பதை வேதத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

**மரணம் நிச்சயமானது:**

இத்தற்காலிகமான உலகில் நம் சரீர வாழ்க்கை நிரந்தரமாக இருப்பதற்காக வடிவமைக்கப்படவில்லை. ஆகவே, இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்வது ஒவ்வொருவருக்கும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது, (II கொரிந்தியர் 5:1–10). உயிரோடிருக் கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே... (பிரசங்கி 9:5).

**மரணம் நிச்சயமற்றது:**

அது எப்போது வருமென்று நமக்ண்த் தெரியாது. பலர் தன்னுடைய செழிப்பினால் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் திளைத்துப் போயிருந்த அந்த ஐசுவரியவானுடைய ஜீவன் எதிர்பாராத விதமாக எடுக்கப்பட்டது போல தங்கள் ஜீவன்

எடுக்கப்படுவதைக்கண்டு ஆச்சரியத்தால் திக்குமுக்காடிப் போவார்கள் (லூக்கா 12: 16-21). யாக்கோபு ஆசிரியர் நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப் பட்டது? கொஞ்சகாலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே என்று எச்சரிக்கிறார் (யாக்கோபு 4:14).

**மரணம் பட்சபாதம் பார்ப்பதில்லை**

வாலிபர்களும், வயதானவர்களும், ஏழைகளும், ஐசுவரியவான்களும், நீதிமான்களும், துன்மார்க்கர் எல்லோருமே மரண அழைப்புக்கு கீழ்ப்பட்டுத்தான் இருக்கிறார்கள் ( சங்கீதம் 49:10). ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின் மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை, மரணநாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை ( பிரசங்கி 8:8).

**மரணம் அதைப்பற்றி அறிவில்லாதவர்களுக்கும், ஆயத்தமில்லாதவர்களுக்கும் அச்சுறுத்தலாயிருக்கிறது.**

அறியாத காரியங்களைத் குறித்த பயம் மனிதனுக்கு இயல்பாக இருக்கின்ற ஒன்றாக இருந்தாலும் கூட, சம்பவிக்கப் போவதை அறிந்து அதற்காக எந்த ஆயத்தமும் இல்லாமலிருப்பது கொடுமையானதாகும், நீதிமான்கள். இப்பொழுது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது (II சாமுவேல் 24:14) என்று ஜெபிக்க முடியும். ஆனால், நித்தியத்திற்கு ஆயத்தமில்லாதவர்களுக்கு ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கர மாயிருக்குமே ( எபிரெயர் 10:31).

**மரணம் இவ்வாழ்க்கைக்கு அப்பால் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு துக்ககரமானது.**

நமக்குப் பிரியமானவர்கள் மரிக்கும் போது வித்தியாசம் துக்கிப் பவர்களுக்கும், துக்கிக்காதவர்களுக்கும் இடையில் இல்லை, ஆனால் நம்பிக்கையற்றவர்களுக்கும், நம்பிக்கை உள்ளவர் களுக்கும் இடையில் தான் இருக்கிறது ( I தெசலோனிக்கேயர் 4:13). மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்க வர்களாயிருப்போம் என்று சொல்கிறார் (I கொரிந்தியர் 15:19).

**மரணம் தேவனோடு காரியங்களை சரிசெய்து கொள்வதற்கு வாய்ப்புகளின் முடிவாயிருக்கிறது.**

லாசரு ஐசுவரியவான் உவமையிலிருந்து நாம் கற்றுக் கொண்ட மிகப்பெரிய பாடம் (லூக்கா 16:19-31) தேவன் இவ்வாழ்வில்தான் அவரோடு காரியங்களை சரி செய்து கொள்வதற்கு வாய்ப்புகளை கொடுக்கிறார். கல்லறைக்கு அப்பால் சூழ்நிலைகளை நம்மால் மாற்ற முடியாது.

**மரணம் வாசலாயிருக்கிறது.**

ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் (ரோமர் 8:18) நாம் இவ்வாழ்க்கையைவிட்டுக் கடந்து அடுத்த வாழ்க்கைக்குள் பிரவேசிக்க மரணவாசல் வழியாகத் தான் கடந்து போக வேண்டும் ( I கொரிந்தியர் 15:50) துரதிஷ்ட வசமாக பலர் இப்பாழாய் போன வாழ்க்கையை விட்டுப் பிரியப் பிரியமில்லாமல் இருக்கிறார்கள். ஆனால், தேவன் தமக்கு கீழ்ப்படிப்பவர்களுக்கு இதை விட மேலான காரியங்களை வைத்திருக்கிறார்.

**மரணம் ஒரு பயணமாயிருக்கிறது.**

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர் களாயிருக்கிறோமென்றும் அறிந்தும், எப்பொழுதும் தைரியமா யிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து இத்தேகத்தை விட்டு குடிப்போகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் (II கொரிந்தியர் 5:6-8). அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்... தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசை யுண்டு அது அதிக நன்மையாயிருக்கும் என்று முடிக்கிறார் (பிலிப்பியர் 1:21-23).

**மரணம் இளைப்பாறுதலாயிருக்கிறது.**

பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக்கேட்டேன் அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள் அவர்களுடைய கிரியைகள் அவர்களோடேப்போம் (வெளிப்படுத்தின விசேஷம் 14:13). தேவன் இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கிவிட்டு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்பது சிருஷ்டிப்பு காரியங்களிலிருந்து அவர் இளைப்பாறினார் என்று தான் பொருள்படும் (ஆதியாகமம் 2:2) பழங்கால யூதர்களுக்கு கட்டளையிடப்பட்ட ஓய்வுநாள் அவர்கள் எகிப்தின் அடிமைத் தனத்தில் பட்ட பாடுகளுக்கு முடிவாயிருந்தது (உபாகமம் 5:15) கானான் தேசத்தில் இஸ்ரவேலின் சுதந்திரம் வனாந்திரப்பாடு களிலிருந்து இளைப்பாறுதலாயிருந்தது (யோசுவா 21:43-45). அதே போல் நம் பரலோக இளைப்பாறுதல் செயல்பாடற்ற ஒரு நித்தியமாக இருக்காது, ஆனால் இவ்வுலக வாழ்வின் வருத்தம், பாடு, உபத்திரம் போன்றவைகளிலிருந்து விடுபடுகிற ஓர் அனுபவமாகத்தான் இருக்கும் (எபிரெயர் 4:1-11).

# ஜெபத்திலே உறுதியாய் தரித்திரு

(ரோமர் 12:12)

Bro. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக. வியாதி உலகளாவிய தீவிரம் காட்டும் இந்த வேளையில் தேவனுடைய பிள்ளைகளின் பொறுப்பு அதிகமாக உள்ளது. யாவருக்காகவும் ஜெபிக்க வேண்டிய கடமை நமக்குக் கொடுக்கப்பட்டு உள்ளது [1தீமோ 2:1,2]. ஏனெனில் நாம் மாத்திரமே தேவனிடம் பேசும் மிகப்பெரும் வாய்ப்பை சிலாக்கியத்தை ஆண்டவர் இயேசுவின் மூலம் பெற்றுள்ளோம். இதற்காக சகாயங்கிடைக்கும் காலத்தில் பக்தியுள்ளவன் எவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது. [சங் 32:6] ஆகவே, பக்தியுள்ள நாம் தான் இந்த வேளையில் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தேவனுடைய தலைமையை மறந்து தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்ட போது கர்த்தர் இடி முழக்கங்களையும் மழையையும் கட்டளையிட்டார். ஜனங்கள் பயந்து சாமுவேலிடம் முறையிட்ட போது நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாவிட்டால் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறவனாய் இருப்பேன். அது எனக்கு தூரமாய் இருப்பதாக என்று பதிலளித்தான் [1 சாமு.12:23]. உலகமெங்கும் கொரோனா வியாதி பாதிப்பால் அநேகர் இறந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் ஜெபிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது பாவமாகும்.

என் ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்பும் என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்பினால் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன் என்று 2 நாளா 7:13,14 ல் வாசிக்கிறோம். இன்றைய சூழ்நிலையில் நம் வழிகளை நாம் ஆராய்ந்து மனந்திரும்ப வேண்டிய காரியங்களில் நாம் மாற வேண்டும்.

அப்படியில்லையெனில், சீலோவாமில் கோபுரம் விழுந்து பதினெட்டு பேர் இறந்தபோது இயேசுவானவர் ஜனங்களிடம் நீங்களும் மனந்திரும்பாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் [லூக் 13:4,5] என்று கடந்து கொண்டதை

நாம் இந்த வேளையில் நினைவுகூர வேண்டும். நாம் ஏற்கனவே நம்மை நாமே சோதித்தறிய வாரந்தோறும் உணர்த்தப்படுகிறோம். ஆகவே, நாம் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருக்க வேண்டும். முகாந்திரமில்லாமல் யோபுவை நிர்மூலமாக்க சாத்தான் முயற்சித்த போதும் தன் உத்தமத்திலே உறுதியாய் நின்றான் யோபு (2:3) தேவன் மனிதனுக்கு சுகவாழ்வைக் கட்டளையிட்டால் மனுஷன் அதின் மேல் உறுதியாய் நம்பிக்கை வைக்கிறான். ஆனால், அது தேவனுக்கு விரோதமானது (யோபு 24:23). இன்றைய கொள்ளை நோய் எல்லாவற்றையும் தலைகீழாய் மாற்றியுள்ளது. சுமார் 45,000 சதுர அடியில் மிகப் பிரம்மாண்ட அரண்மனை ஒன்று கேரளாவில் உள்ளது. அதின் உரிமையாளர் ஜாய் அராக்கல் வயது 52. இவர் வேறு யாருமல்ல மிகப்பிரபலமான ஜாய்ஆலுக்காஸ் நகைக்கடை அதிபர். சமீபத்தில் கொரோனா வியாதியினால் வெளிநாட்டில் மரணமடைந்ததாக செய்தியில் காண்கிறோம். அதனால் தான் மனுஷன் உலக முழுதும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் லாபம் என்ன? என்கிறார் நமதாண்டவர்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்தில் கலகம் பண்ணின போது தேவன் அவர்களை அழிக்க சித்தமானார். அப்போது மோசே கர்த்தரின் சமூகத்தில் இரவும் பகலும் நாற்பது நாள் விழுந்து கிடந்து விண்ணப்பஞ் செய்தார் (உபா 9:24,25) அதினாலே அவர்கள் தேவன் தப்பவிட்டார். மோசே என்னும் தேவனுடைய மனுஷன் ஜெபித்தால் அவர்கள் அழிவுக்கு தப்பியது போல இன்றைய நாளிலும் தேவனுடைய மனுஷர்களாய் இருக்கும் சபை மக்களாகிய நாமே உலகத்தாருக்காக ஜெபிக்க கடமைப் பட்டுள்ளோம். அப்படியே கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின் மேல் திரும்பவும் தாவீதின் காலத்தில் மூண்டபோது மூன்று மாதம் விரோதிகளிடம் துன்புறுதல் அல்லது மூன்று நாள் கொள்ளை நோய் என்று வேண்டியதை தெரிந்தெடுக்க காத் என்னும் தீர்க்கதரிசி கேட்ட போது - தாவீது கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன். இப்போது நாம் கரத்தருடைய கையிலே விழுவோமாக என்று கெஞ்சினான். (II சாமு 24:14-6) பிற்பாடு வந்த கொள்ளை நோய் 70,000 பேரை கொன்ற போது தேவனே மனஸ்தாபப்பட்டு அந்த வாதையை நிறுத்தினார். ஞாபகம் வையுங்கள் அந்த தேவன் தான் இப்போது நம்மையும் காக்க வல்லவர்.

கிறிஸ்துவின் வருகை எப்போது என குறிப்பிட்டு சொல்ல இயலாவிட்டாலும் நாம் எப்போதும் ஆயத்தமாயிருக்க

பணிக்கப்பட்டுள்ளோம். பவுல் II தீமோ:3:15ல் சொல்லப்பட்ட அநேகக் காரியங்களை இது கடைசிக்காலமாய் இருக்கலாம் என்பதை உணர்த்துகிறது. சுபாவ அன்பு இல்லாதது தற்பிரியர், பணப்பிரியர், இச்சை யடக்கமில்லாத, பெற்றோருக்கு கீழ்ப்படியாத அநேகருக்குள்ள சமுதாயத்தில் தான் நாம் இப்போது வாழ்கிறோம். ஆகவே, நாம் நினையாத நாழிகையிலே வரப்போகிற மனுஷக் குமாரனுக்காக நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். [மத் 2:42-44] விழித்திருப்பதும் ஜெபிப்பதும் ஒன்றையொன்று சார்ந்தது ஆகும். எனவே தான், நமதாண்டவர் நீங்கள் சோதனைக்குட்படாத படிக்க விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் [மத் 26:41] என்றார்.

ஜெபவீரன் தானியேல் சிங்கங்களின் வாயைத் தேவன் அடைக்கக் காரணமாய் இருந்ததுபோல எனக்கருமையான தேவ பிள்ளைகளே இந்த கொரோனா நோயின் கொடுமை நீங்க நம்முடைய ஜெபங்கள் காரணமாக அமையட்டும். ஆண்டவர் சொன்னது போல சோர்ந்து போகாமல் ஜெபம் செய்வோம் [லூக்கா 18:1]. மற்றும் அப்போஸ்தலர் உபதேசப்படி இடைவிடாமல் ஜெபம் பண்ணுவோம். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திரு [கொலோ 4:2]. தேவ கிருபையையும் சமாதானமும் நம் அனைவரோடும் கூட இருப்பதாக ஆமென்! ✝

## தேவனால் பிறந்தவன் எப்படி இருப்பான்?

**அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான் [I யோவான் 4:7]**

**இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான் [I யோவான் 5:1]**

**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் [I யோவான் 5:4]**

**தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யானென்று அறிந்திருக்கிறோம் [I யோவான் 5:18]**

# ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், ஆனால் ...

Bro. Jerry Bates

**சோ**ம்பேறிகளைக் குறித்து ஞானி சாலமோன் இப்படி வேடிக்கையாகச் சொல்லியுள்ளார். **வழியிலே சிங்கம் இருக்கும், நடு வீதியிலே சிங்கம் இருக்கும் என்று சோம்பேறி சொல்லுவான்** [நீதி 26:13] நல்லது. ஆனால், சோம்பேறிகளை எண்ணி நகையாட நாம் யார்? சிங்கத்தை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்று சொல்லப்படுவோமானால் அங்கு நாம் வேலை செய்யப் போவோமா? ஆனால், பழைய ஏற்பாட்டின் காலத்தில் மேய்ப்பர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இக்கட்டுரையை எழுதும் போது பலவித சாலை விபத்துகளில் அநேகர் மரித்துப் போனார்கள் என்று செய்தி வருகிறது. அத்தோடு உலகில் **கொரோனா** தொற்றின் மூலம் மரணமும் இலட்சங்களில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. சாலை விபத்துகளைக் காட்டிலும் கொரோனாச் சாவுகள் ஏன் சோகமானதாக உள்ளது?

சில வருடங்களுக்கு முன்பு, ஓர் இளம் ஜோடிக்குக் குழந்தைப் பிறந்தது. குழந்தையின் தகப்பன், குழந்தையை எடுத்துக் கொண்டு தூர இடத்தில் இருக்கும் தனது பாட்டியிடம் காட்டுவதற்குப் புறப்பட்டுப் போனான். அப்பாட்டி இருக்கும் இடத்திற்கு அருகில் போனவுடன் இன்னும் சற்று நேரத்தில் உங்களிடத்தில் வந்துவிடுவேன் குழந்தையோடு என்று தகவல் கொடுத்தான். அப்பாட்டியோ, வேண்டாம், சிறு குழந்தைகளிடம் கிருமி இருக்கும் என்று சொல்லி மறுத்துவிட்டாள். அவர்கள் ஏமாற்றத்தோடு திரும்பிப் போய்விட்டார்கள். பிறந்த குழந்தையிடம் கிருமி இருக்கும், தொற்று ஏற்படும் என்பது உண்மையே. இது பொதுவான ஒரு கருத்து தான். ஆனால், அவளுடைய பயத்தால் தன் கொள்ளுப்பேரக் குழந்தையைப் பார்க்கும் ஒரு பெரிய ஆசீர்வாதத்தை இழந்து போனாளே.

தேவ ஜனங்கள், வாக்குத்தத்த பூமிக்குள் பிரவேசிக்க ஆயத்தமானபோது மோசே, கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதமும், கீழ்ப்படியாமைக்கு சாபமும் இருக்கும் என்று கூறினான். சாபங்களில் சில இப்படியாக உள்ளது. உன் ஜீவன் உனக்கு சந்தேகத்தில் ஊசலாடும், உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கை யில்லாமல் இரவும் பகலும் திகில் கொண்டிருப்பாய். நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும்

காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில் எப்பொழுது விடியற்காலம் வருமோ என்று சொல்லுவாய். (உபாகமம் 28:66,67 ஒட்டு மொத்த உலகமும் கோவிட் -19 தொற்று நோயால் உறைந்து போயிருக்கும் போது, அது பற்றிய எச்சரிக்கை உணர்வு நமக்கு அவசியமில்லை என்று நான் கூறவில்லை.

மாறாக, தேவப்பிள்ளைகள் பயந்து கிடக்கத் தேவையில்லை. வழியிலே சிங்கம் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். நாம் எப்பகுதியில் வாழ்கிறோமோ அதனடிப்படையில் காரியங்கள் அமையும். கொரோனா மட்டும் நமக்கு ஆபத்தல்ல. சாலைப் பயணங்கள் கூட ஆபத்தானவைதான்.

கர்த்தருடைய சபையாரே, நாம் இப்படிச் சொல்லுகிறவர் களாக இருப்போம். **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்... பொல்லாப்புக்கு பயப்படேன். தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர். உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்... ஆமென்!!!**

## நாளும், நடப்பும்

- கொரோனா கொள்ளைநோயால் உலகமுழுவதும் நான்கு லட்சம் பேர் உயிர் இழந்திருக்கிறார்கள். இன்னும் இந்நோய் தீவிரமாய் பரவி வருகிறது.
- அடுத்த ஓராண்டில் எந்த ஒரு புதிய திட்டமும் இல்லை – மத்திய அரசு திட்டவட்டம்.
- நாட்டில் மின்னணு உற்பத்தியை மேம்படுத்த ஐம்பதாயிரம் கோடி ஒதுக்கீடு.
- நாட்டில் இம்மாதம் எட்டாம் தேதி முதல் வழிபாட்டு தலங்கள் கட்டுப்பாடுகளுடன் திறக்க மத்திய அரசு அனுமதி.
- வட மாநிலங்களில் வெட்டுக்கிளிகளின் அட்ட காசத்தினால் பலகோடி ரூபாய் மதிப்பிலான பயிர்கள் நாசம்.